## சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முற்றாகப் பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்த கொள்விலை ரூபா 1,221,626 தொகையான கட்டிடங்கள் மற்றும் பொருத்திகளின் கிரயம் மற்றும் அதற்குரித்தான ரூபா 1,221,626 தொகையான திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மற்றும் தேறிய பெறுமதி என்பன முற்றாக நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. இச் சொத்துக்கள் பதிவழிக்கப்பட்ட பெறுமதிக்கு ஐந்தொகையில் காண்பிக்கப்பட வேண்டியதாக 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் போது சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அதனை சரிசெய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் இறுதிவரையில் முழுமையாக பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு இறுதிக்கூட்டுத்தொகை ரூபா 791,036 ஆன நூலகப் புத்தகங்களின் கிரயம் மற்றும் பெறுமானத் தேய்வு ஏற்பாடுக் கணக்குகளும் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.

(ஆ) முற்றாகப் பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டு முடிவடைந்திருந்த நூலகப் புத்தகங்களுக்காகவும் பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக 2010 ஆம் ஆண்டில் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 193,853 பெறுமானத் தேய்வின் அளவினை 2011 ஆம் ஆண்டின் போதும் சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்நாட்டு மாநாட்டுக் கட்டணங்களாக கணக்கு வைக்கவேண்டிய ரூபா 20,000 தொகையானது நூலகப் புத்தகங்களின் கொள்வனவாக குறிப்பிடப்பட்டிருந்தமையின் காரணமாக நூலகப் புத்தக கணக்கு மீதி ரூபா 20,000 இனால் அதிகரித்தும் உள்நாட்டு மாநாட்டுக் கட்டணக் கணக்கு மீதி அத்தொகையினால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

### 1.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் இன்மையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (அ) | நிலையான சொத்துக்கள் | 1,902,804 | (i) | நிலையான சொத்துப் பதிவேடு |
| | | | (ii) | பௌதீக மெய்மையாய்வு அறிக்கை |
| (ஆ) | புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்ட நிலையான சொத்துக்கள் | 2,012,662 | (iii) | விபரமான பட்டோலை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு மிகை ரூபா 232,622,256 ஆனதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 274,925,879 ஆக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 42,303,623 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. நிதியத்தின் ஒட்டு மொத்த வருமானம் முன்னைய ஆண்டை விட 8% அளவில் குறைவடைந்தமை, உள்நாட்டு, வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினம் 167% இனால் அதிகரித்தமை நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு அடிப்படையாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிதியத்தின் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டினதும் முன்னைய ஆண்டிற்குமான நிதி விளைவுகள் பகுப்பாய்வு செய்து கீழே காட்டப்படுகின்றது.

| வருமானம் | 2011 ஆம் ஆண்டு | 2010 ஆம் ஆண்டு | அதிகரிப்பு /(குறைவு) | | வருமானத்தின் சதவீதமாக செவினம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2011 | 2010 |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | % | % | % |
| தண்டப் பணமும் கைப்பற்றப்பட்ட பொருட்கள் விற்பனையும் | 281,485 | 305,601 | (24,116) | (7.89) | | |
| ஏனைய பெறுவனவுகள் | 517 | 300 | 217 | 72.33 | | |
| வருமானக் கூட்டுத்தொகை | **282,002** | **305,901** | **(23,899)** | **(7.81)** | | |
| செலவினம் | | | | | | |
| உள்நாட்டுப் பயிற்சி மற்றும் மாநாடு | 12,233 | 2,859 | 9,374 | 327.87 | 4.33 | 0.93 |
| வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் மாநாடு | 33,926 | 13,374 | 20,552 | 153.66 | 12.03 | 4.37 |
| பட்டப்பின் படிப்பு கற்கைநெறி | - | 10,800 | (10,800) | (100) | - | 3.53 |
| கூட்டுத்தொகை | **46,159** | **27,033** | **19,126** | **70.74** | **16.36** | **8.84** |
| ஏனைய செலவினம் | 3,221 | 3,942 | (721) | (18.29) | 1.14 | 1.29 |
| மொத்தச் செலவினம் | 49,380 | 30,975 | 18,405 | 59.4 | 17.5 | 10.13 |
| **மிகை** | **232,622** | **274,926** | **(42,304)** | **(15.38)** | **-** | **-** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சுங்க பரிசோதனையினூடாக கைப்பற்றப்பட்ட பொருட்களுக்காக விதிக்கப்படும் தண்டப் பணமும் கைப்பற்றப்பட்ட பொருட்களின் விற்பனையால் கிடைத்த

வருமானத்தில் 50% அளவு வெகுமதிக்காக ஒதுக்கீடு செய்ததன் பின்னர் எஞ்சிய 50% தொகையில் 40% சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட போதிலும் இந்நிதியத்தின் பிரதான நோக்கம் பின்வருமாறு இருந்தது.

- சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ திறனை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக ஏற்படும் செலவினங்களை மீள்நிரப்புதல்
- விபத்துக்களுக்கு உட்படும் உத்தியோகத்தர்களுக்கு இழப்பீடு வழங்குதல்

எவ்வாறாயினும் சுங்க முகாமைத்துவ திறனை மேம்படுத்துவதற்காகவும் உத்தியோகத்தர்களுக்கு இழப்பீடுகளை செலுத்துவதற்காகவும் அளவீடுகள் குறிப்பாக இனங்காணப்படாலும் இந்நிதியத்திற்கு நிதிஒதுக்கீடு செய்தமையால் நிதியத்தின் திரண்ட மீதி வருடாந்தம் அதிகரித்துச் செல்லும் போக்கொன்று அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் திரண்ட மீதி ரூபா 3,087,093,036 ஆக இருந்தது. மேலும் 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளில் நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகைகளில் ஒட்டு மொத்தப் பயன்பாடு முறையே 10.12% ஆகவும் 17.5% ஆகவும் இருந்தன.

(ஆ) முன்னைய இரண்டு ஆண்டுகளின் செலவினங்களின் தன்மையைப் பரீட்சித்தபோது வெளிநாட்டுப் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களின் கிரயத்தை ஈடுசெய்வதற்காக இந்நிதியம் முக்கியமாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் உழைத்த வருமானத்தில் முறையே 4.37% மற்றும் 12.03% ஆக வெளிநாட்டு பயிற்சி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அது அவ்வருடங்களின் மொத்தச் செலவில் 43% மற்றும் 69% ஆகும். இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் மொத்தச் செலவினங்களில் வெளிநாட்டுப் பயிற்சி நடவடிக்கைகளின் கிரயம் சதவீத ரீதியாக அதிகரித்திருந்தது.

(இ) உத்தியோகத்தர்களின் பட்டப்பின்படிப்பு கல்வி நடவடிக்கைகளுக்காக முன்னைய ஆண்டில் ரூபா 10,800,000 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது எவ்வித தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.2 நோக்கத்திற்கு முரணான செலவினம்

தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்த ரூபா 2,549,491 தொகை நிதியத்தின் நோக்கங்களுக்கு புறம்பான செலவினங்களாகக் காணப்பட்டதுடன் இவை 2011 ஆம் ஆண்டின் நிதியத்தின் முழுச் செலவினத்தில் 5% ஆக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பும் நல் ஆளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின்போது உள்ளபடியான மற்றும் பாதிடப்பட்ட வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே 50% இற்கு மேற்பட்ட முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு சிறந்த கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ திறனை மேம்படுத்தல்
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) நிதியப் பயன்பாடு
(ஈ) இணக்கச் செயற்பாடு
(உ) வெளிநாட்டுப் பிரயாணச் செலவினம்